# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# Annual Report

# 2019

**නිපුණතා සංවර්ධන, රැකිරක්ෂා හා කම්කරු සබඳතා අමාත්‍යාංශය**

திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சகம்

**Ministry of Skill Development, Employment and Labor Relations**

**සීමාසහිත නිපුණතා සංවර්ධන අරමුදල**

**திறன் மேம்பாட்டு நிதி லிமிடெட்**

**Skills Development Fund Limited**

mswordcoverpages.com

# உள்ளடக்கம்

01. நிறுவகப் பின்னணி 01

02. எங்கள் பார்வை, பணி 02

03. நிறுவனத்தின் தாபிப்பு 03

04. நிறுவன அமைப்பு வரைபடம் 04-05

05. சபை அங்கத்தவர்கள் 2019 06

06. செயலாற்றுகை மீளாய்வு 07-08

07. வருடாந்த இறுதி கணக்கீட்டு அறிக்கை 09-32

08. தணிக்கை கருத்து 33-39

# கம்பனியின் பின்னணி

| | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் |
| அந்தஸ்து | : முழுமையாக அரச உரிமையுள்ள கம்பனி |
| அமச்சு | : திறன் மேம்பாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சகம் |
| முகவரி | : 354/2, 7ஆம் மாடி<br>“நிபுனதா பியச”<br>எல்விடிகல மாவத<br>நாரஹேன்பிட<br>கொழும்பு 05. |
| இணையத்தளம் | : www.skillsdevelop.lk |
| மின்னஞ்சல் முகவரி | : info@skillsdevelop.lk |
| தொலைபேசி | : 0112507274 |
| தொலை நகல் | : 0112055601 |
| வங்கியாளர்கள் | : இலங்கை வங்கி<br>: மக்கள் வங்கி |

# வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம்

## கருப்பொருள்

மக்கள் அபிவிருத்தி உடாக சிறப்பு மற்றும் வெற்றி

## தொலைநோக்கு

திறன்கள் விருத்தியில் நாட்டின் பிரதானியாக இருத்தல்

## பணிநோக்கு

திறன்கள் விருத்தியின் ஊடாக நாட்டின் தொழில் முயற்சியில் போட்டித்தன்மையை மேம்படுத்தல்



# நிறுவனத்தின் தாபிப்பு

தொழிநுட்ப கல்வி மற்றும் தொழிற் பயிற்சி தொடர்பில் சனாதிபதி செயலணியினால் பரிந்துரை ஒன்றின் அடிப்படையில் ஒரு முன்னோடிக் கருத்திடமாக 1988 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் முதலில் தாபிக்கப்பட்டது.

1999 ஆகஸ்ட் 20ஆம் திகதி, வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைப்புச் செய்யப்பட்டது என்பதோடு அதன் பதிவிலக்கம் N (PBS) 832 ஆக இருந்தது.

கம்பனியில் சாதாரண பங்குகளில் 1999 செப்டெம்பர் மாதம் ரூபாய் 100 மில்லியன் முதலீடொன்றுக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது என்பதோடு அதனை வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் பாதுகாப்பு முதலீட்டில் முதலீடு செய்தது. இந்த முதலீட்டிலிருந்தும் மற்றும் கம்பனியின் இயக்கத்திலிருந்தும் பெறுகின்ற வருமானம் மீண்டெழும் செலவினங்களை சமாலிப்பதற்கு போதுமாக இருக்குமென ஆலோசனை கூறப்பட்டது. இந்த ஏற்பாட்டின் மூலம் வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் சுயமாக நிலைத்திருப்பதையும், அரசாங்கத்தின் ஆரம்ப முதலீடு, இலங்கை தொழில் தருனர்கள் சம்மேளம் மற்றும் ஏனைய முதலீட்டாளர் பாதுகாக்கப்படுகின்றர் என்பதையும் உறுதி செய்வதற்காகும் .

வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்-பதிவு செய்யப்பட்டது என்பதோடு அதன் பதிவிலக்கம் PB 833 ஆகும்.

### முதன்மை குறிக்கோள்கள்

நிறுவனத்தின் அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் விரிவான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- தொழில் நுழைவுப் பயிற்சி, திறன்கள் மேம்படுத்தல் மற்றும் ஊழியர்களை மீள்-பயிற்சியளித்தல் என்பவற்றுக்கு ஆதரவளித்தல்.
- உயர்வாக பயிற்சியளிக்கப்பட்ட மற்றும் திறன் வாய்ந்த வேலைப்படையை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதற்கு தொழில் முயற்சி அடிப்படையில் விரிவாக்குவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும்.
- பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் தருனர்களுக்கிடையில் இணைப்புக்களை வழங்குதல்

# நிறுவன அமைப்பு வரைபடம்



# வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் பதவியணி

2018.12.31ஆம் திகதியில் உள்ளவாறான ஊழியர்கள்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | நிலவுகின்ற பதவியணி |
|---|---|---|
| **01. தலைவர்.ஃ.பிரதம நிறேவேற்று அதிகாரி** | 01 | 01 |
| **02. நிர்வாக இயக்குனர்** | | 01 |
| **03. பொது மேலாளர்** | 01 | 01 |
| **04. நிகழ்ச்சி ஆலோசகர்** | 02 | 00 |
| **05. கணக்காளர்** | 01 | 01 |
| **06. நிகழ்ச்சித்திட்ட அலுவலர்** | 02 | 02 |
| **07. நிருவாக அலுவலர்** | 01 | 01 |
| **08. பயிற்சி ஆலோசகர்** | 02 | 02 |
| **09. முகாமை உதவியாளர்கள்** | 18 | 18 |
| **10. சாரதிகள்** | 02 | 02 |
| **11. அலுவலக பணியாட்கள்** | 03 | 08 |
| **மொத்தம்** | **32** | **37** |

# சபை அங்கத்தவர்கள் 2019

வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தில் பொது திறைசேரியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட 12 பணிப்பாளர்கள் இருக்கின்றனர் என்பதோடு அவர்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன:

**இயக்குநர் குழு 2019.01.01 முதல் 2019.03.10 வரை**

01. திரு. தர்ம தீரசிங்க (தலைவர்)
02. திரு. எம்.ஏ.எஸ்.எச். பெரேரா
03. திரு.எல்.எஸ்.பி. கிரிஹாகம
04. திரு.ஜி.கே.எம்.டி.எஸ். ஸ்வர்ணதிலகா
05. திரு. எஸ். சந்திரசேன
06. திரு. ஏ.ஜி.ஆர்.பி. சோமரத்னா
07. திரு. கே.எம்.பி. கருணாரத்னா

**இயக்குநர் குழு 2019.03.11 முதல் 2019.12.01 வரை**

08. திரு.கபில ரணசிங்க (தலைவர்)
09. திரு. எம்.ஏ.எஸ்.எச். பெரேரா
10. திரு.எல்.எஸ்.பி. கிரிஹாகம
11. திரு.ஜி.கே.எம்.டி.எஸ். ஸ்வர்ணதிலகா
12. திரு. எஸ். சந்திரசேன
13. திரு. ஏ.ஜி.ஆர்.பி. சோமரத்னா
14. திரு. கே.எம்.பி. கருணாரத்னா
15. திரு. ரோஜர் ஸ்ரீவாசா

பின்வரும் திகதிகளில் நாரஹேன்பிடவில் உள்ள வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டுக்காக 06 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

| திகதி | பங்குபற்றுதல் |
|---|---|
| 2019.01.29 | 5 |
| 2019.02.26 | 5 |
| 2019.05.08 | 5 |
| 2019.07.10 | 6 |
| 2019.09.05 | 6 |
| 2019.11.29 | 6 |

# செயலாற்றுகை மீளாய்வு

## நிகழ்ச்சித் திட்டங்க

செயற்திறன் வாய்ந்த மற்றும் பெறுபேறுகளைத் தருகின்ற வாழ்க்கையை அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கக் கூடிய தெரிவுகளை அமைத்துக் கொள்வதற்காகவும் மற்றும் வேலைகளில் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், நெகிழ்வுத் தன்மையுடைய வேலைப்படைக்காக உதவிகளை வழங்குகின்ற, பயிற்சியில் பங்குபற்றுதலை அதிகரிக்கின்ற பொதுத்துறை மற்றும் தனியார் துறை தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்கு இலங்கையில் உறுதியானதும் மற்றும் மிகவும் போட்டித் தன்மையுடைய நிறுவனம் ஒன்றை கட்டியெழுப்புதல் வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் பணிநோக்காகும்.

தொழில் தருனர்கள் அவர்களின் தொலைநோக்குகள் மற்றும் பணிநோக்குகள் என்வற்றை பூர்த்தி செய்வது கொள்வதற்கு உதவி செய்வதில் மனித வளம் மற்றும் திறன்கள் விருத்தி என்பவற்றுக்கு ஆதரவளிக்கின்ற நிகழ்ச்சிகள் ஊடாக அவர்களின் தொழில் துறை முழுவதிலும் தொழிலாளர்களுக்கு பயன் விளைவடையக் கூடிய பல்வேறு வகை பயிற்சிகளை வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் வழங்குகின்றது. கடந்த வருடத்தில், வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் வடிவமைப்பு மற்றும் புத்தாக்கம், மற்றும் நிறுவனங்கள் ஊடாக செயற்றிறன் மற்றும் ஒன்றிணைத்தல் என்பவற்றை ஊக்குவிக்கின்ற புதிய வியாபாரச் செயன்முறைகள் என்பவற்றை அமுல்படுத்தலிலும், மற்றும் விலைமனு மதிப்பீடு, சம்பள மாற்றம், நிதியியல் தலைமைத்துவம், விநியோக சங்கிலி முகாமை போன்றவற்றிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. முன்னுரிமைகளின் தொகுதியொன்றுடன் நிதியத்தின் செயற்பாடுகளை சிறப்பாக வரிசைப்படுத்துவதில்: அதாவது அதன் நிதியியல் இலக்குகளை அடைதல், அது வியாபாரத்தை மேற்கொள்கின்ற முறையை நவீனமயப்படுத்தல் மற்றும் அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளும் சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தல் என்பவற்றில் வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் கவனம் செலுத்தியது.

பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டு துறை ஊழியர்கள் மீதும் நேரடி தாக்கம் உள்ள சில முக்கிய அடைவுகளைக் கோடிட்டுக் காட்டுகின்ற நிகழ்ச்சிகள் மற்றும் துறைசார் கற்கை நெறிகளின் செயற்றிறன் மற்றும் விளைபயனை மேம்படுத்துவதற்கு 2019 நிதியாண்டில் வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியம் முயற்சிகளை மேற்கொள்கின்றது. 12,130 பங்குபற்றுனர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு போதிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை வழங்குகின்ற அதேநேரம் பயிற்சி நிகழ்ச்சிகளை நவீனமயப்படுத்தல் பணியைத் தொடர்ந்து செயற்படுத்தியது.

2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பல்வேறு வகை நிகழ்ச்சிகளின் விபரமும் மற்றும் எண்ணிக்கையும்

| நிகழ்ச்சிகளின் வகைகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திறந்த செயலமர்வுகள் | 131 | 3967 |
| வாடிக்கையாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் | 130 | 7983 |
| கல்விசார் (சான்றிதழ்) பயிற்சி நெறிகள் | 08 | 120 |
| சர்வதேச பயிற்சி நிகழ்ச்சிகள் | 03 | 60 |

# நிகழ்ச்சிகளின் வருமானம், செலவினம் மற்றும் இலாபம்

வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் பிரதான வருமான மூலம் வங்கி வட்டி/ திறைசேரி வைப்பக்களாக இருந்த போதும், நிகழ்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் என்பவற்றிலிருந்து குறிப்பிடத்தக்க ஒரு வருமானத்தை நிதியம் பெற்றுக் கொண்டுள்ளது. 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் இலாபம் என்பவற்றை பின்வரும் அட்டவணைகள் எடுத்துக் காட்டுகின்றன.

| 2017 (மில்லியன்) | | | 2018 (மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|
| வருமானம் | செலவினம் | இலாபம் | வருமானம் | செலவினம் | இலாபம் |
| 84.71 | 44.27 | 39.4 | 74.76 | 33.08 | 42.81 |

2019 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் சகல நிகழ்ச்சிகளும் ரூபாய் 42.81 மில்லியன் இலாபத்தில் நடாத்தப்பட்டுள்ளன. இதன் வெற்றியானது வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் நிழ்ச்சிக்கான ஊழியர்களினதும் மற்றும் ஏனைய ஒத்தாசை வழங்குகின்ற ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு காரணமாக ஆகும்.

# 2020 மார்ச் 03 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான விபரமான வருமானக் கூற்று

# (2019/2020)

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்

“நிபுனதா பியச” 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**
**“நிபுனதா பியச” 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**2020 மார்ச் 03 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான**
**விபரமான வருமானக் கூற்று**

| | | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|---|
| | குறிப்புக்கள் | ரூ. சதம் | ரூ. சதம் |
| வருமானம் | **03** | **69,605,960.00** | **89,465,586.00** |
| நேரடிக் கிரயம் | **04** | **(32,994,642.56)** | **(46,655,701.07)** |
| மொத்த இலாபம்(நட்டம்) | | **36,611,317.44** | **42,809,884.93** |
| ஏனைய வருமானம் | **05** | 2500.00 | 17000.00 |
| | | **36,611,317.44** | 38,741,879.26 |
| நிருவாக மற்றும் தாபனச் செலவினம் | **06** | **(45,026,558.85)** | (44,094,008.22) |
| வட்டி மற்றும் வரிக்கு முன் சம்பாத்தியங்கள் | | **(8,412,741.41)** | (1,267,123.29) |
| தேறிய நிதி வருமானம் | **07** | **14,275,435.34** | **16,017,845.25** |
| வரிக்கு முன்னைய இலாபம் | | **5,826,693.93** | **14,750,721.96** |
| வருமான வரி | **14** | **-** | **(4,356,349.37)** |
| வருடத்துக்கான இலாபம்/(நட்டம்) | | **5,862,693.93** | **10,394,327.59** |
| ஏனைய விபரமான வருமானம் | | | |
| வரையறை செய்யப்பட்ட அனுகூலத்திட்டம் உண்மையான பெறுகைகள்/(இழப்புக்கள்) | | (498,179.00) | (197,771.00) |
| வருடத்துக்கான மொத்த விபரமான இலாபம் | | **6,360,872.93** | **10,196,601.59** |
| **பங்கொன்றுக்கான சம்பாத்தியங்கள்** | **18** | **0.62** | **1.00** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இத்தகைய நிதிக் கூற்றுக்களின் முக்கிய பாகத்தை உருவாக்குகின்றது.அடைப்புக்குள் காண்பிக்கப்பட்டிருப்பது குறைக்கப்பட வேண்டிய தொகைகளாகும்.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**
**"நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**2019 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்புக்கள் | **2019/2020**<br>ரூ. சதம் | 2018/2019<br>ரூ. சதம் |
|---|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | | |
| <u>நடைமுறையல்லாத சொத்துக்கள்</u> | | | |
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள் | **08** | **6,843,600.64** | **8,070,129.34** |
| நிலையான வைப்பு-புலமைப் பரிசில் நிதியம் | | **4,883,250.59** | **4,478,854.28** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | | **658,347.60** | **662,755.72** |
| முதலீடுகள் | **09** | **153,897,430.80** | **152,726,500.76** |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவைகள் | **10** | **22,517,000.53** | **24,334,068.44** |
| பெறப்பட வேண்டிய வருமானவரி | | 1,296,872.18 | 1,296,872.18 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | **15** | 842,700.21 | 6,607,452.28 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | **11** | **20,652,450.66** | **13,512,952.70** |
| **மொத்த சொத்துக்கள்** | | **211,591,653.21** | **211,689,555.70** |
| பங்குமுதல் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| குறிப்பிட்ட மூலதனம் | **12** | **102,001,520.00** | **102,001,520.00** |
| வருமான ஒதுக்கங்கள் | | **479,890.00** | 479,890.00 |
| ஏனைய ஒதுக்கங்கள் | | **-** | (279,303.29) |
| நிறுத்தி வைத்த வருமானம் | | **97,574,813.65** | **97,275,996.08** |
| மொத்த பங்கு மூலதனம் | | **200,056,223.65** | **199,460,102.79** |
| **<u>நடைமுறையல்லாத பொறுப்புக்கள்</u>** | | | |
| ஓய்வூதிய அனுகூலக் கடப்பாடுகள் | **13** | **3,225,347.00** | **3,147,364.00** |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | | - | 4,156,377.00 |
| திறன்கள் அபிவிருத்தி சேமலாப நிதியம் | **16** | 4,575,061.99 | 4,156,377.99 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு | **17** | **3,735,020.57** | **4,925,710.92** |
| **மொத்த பங்கு முதல் மற்றும் பொறுப்புக்கள்** | | **211,591,653.21** | **211,689,555.70** |

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப இத்தகைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என சான்றுப்படுத்துகின்றேன்.

............................ ..................................
கணக்காளர் திகதி

இத்தகைய கூற்றுக்கள் தயாரித்து முன்வைத்தல் என்பவற்றுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்துக்காகவும் மற்றும் அதன் சார்பாகவும் அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது.

.................... ....................
தலைவர் பணிப்பாளர்

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இத்தகைய நிதிக் கூற்றுக்களின் முக்கிய பாகத்தை உருவாக்குகின்றது. அடைப்புக்குள் காண்பிக்கப்பட்டிருப்பது குறைக்கப்பட வேண்டிய தொகைகளாகும்.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**
**"நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**2020 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான பங்குமுதலில் மாற்றத்துக்கான கூற்று**

| | குறிப்பிட்ட மூலதனம் ரூ. சதம் | வருமான ஒதுக்கம் ரூ. சதம் | ஏனைய ஒதுக்கம் ரூ. சதம் | நிறுத்திவைத்த இலாபம் ரூ. சதம் | ஒதுக்கம் ரூ. சதம் |
|---|---|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான நிலுவை | 102,001,520.00 | 479,890.00 | (297,303.29) | 75,628,824.84 | 177,817,391.55 |
| வருடத்துக்கான தேறிய இலாபம் | - | - | - | 10,394,372.59 | 10,394,372.59 |
| ஏனைய வருமானம் | - | - | - | (109,771.00) | (109,771.00) |
| முன்னைய சீராக்கல்கள் | - | - | - | 11,450,569.65 | 11,450,569.65 |
| 2019.03.31இல் உள்ளவாறான நிலுவை | 102,001,520.00 | 479,890.00 | (297,303.29) | 97,275,996.08 | 199,460,102.79 |
| 2019.04.01இல் உள்ளவாறான நிலுவை | 102,001,520.00 | 479,890.00 | (297,303.29) | 97,275,996.08 | 199,460,102.79 |
| வருடத்துக்கான தேறிய இலாபம் | - | - | - | 5,862,693.93 | 5,862,693.93 |
| ஏனைய வருமானம் | - | - | - | 498,179.00 | 498,179.00 |
| வருமானம் | - | - | - | (539,568.55) | (242,265.26) |
| முன்னைய சீராக்கல்கள் | - | - | (297,303.29) | (539,568.55) | (242,265.26) |
| தற்காலிக மாற்றம் ஆரம்பம் மற்றும் திருப்பி அனுப்பலும் | - | - | - | (5,522,486.81) | (5,522,486.81) |
| 2020.03.31இல் உள்ளவாறான நிலுவை | **102,001,520.00** | **479,890.00** | **-** | **97,275,996.08** | **199,460,102.79** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இத்தகைய நிதிக் கூற்றுக்களின் முக்கிய பாகத்தை உருவாக்குகின்றது. அடைப்புக்குள் காண்பிக்கப்பட்டிருப்பது குறைக்கப்பட வேண்டிய தொகைகளாகும்.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**
**"நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**
**2020 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான**

| **நிதிப்பாய்ச்சல் கூற்று** | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன் தேறிய இலாபம்/(நட்டம்) | 5,862,693.93 | 14,750,721.96 |
| **சீராக்கல்கள்** | | |
| பெறுமானத் தேய்வு | 2,954,458.69 | 3,736,490.00 |
| FA அனுமதியின் நட்டம் | **29,403.00** | |
| வட்டி வருமானம் | (14,275,435.34) | (16,017,845.25) |
| நிதிக்கிரயம் | 85,434.95 | 90,556.17 |
| பணிக்கொடை ஏற்பாடு | 706,397.00 | 631,168.00 |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றத்துக்கு முன் நடவடிக்கை இலாபம்** | **(4,637,027.61)** | **3,191,080.88** |
| மூலதனத்தில் மாற்றம் | | |
| கையிருப்பில் அதிகரிப்பு/(குறைவு) | 4,408.12 | 134,756.50 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகளில் அதிகரிப்பு/(குறைவு) | 1,817,067.91 | (3,211,946.77) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளில் அதிகரிப்பு/(குறைவு) | (1,190,690.35) | (709,325.82) |
| இளைஞர் அலுவல்கள் அமைச்சுக்கான கொடுப்பனவில் அதிகரிப்பு/(குறைவு) | 418,684.00 | 433,268.54 |
| நடவடிக்கைச் செயற்பாட்டிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | **3,587,557.93** | **162,147.67** |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (130,235.00) | (320,792.00) |
| செலுத்திய வரி | - | (1,548,530.85) |
| செலுத்திய நிதிக் கிரயம் | (85,454.95) | (90,556.17) |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | **(3,803,247.88)** | **(2,122,026.69)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | (1,170,930.04) | (4,580,069.21) |
| பெற்ற வட்டி வமானம் | 14,275,435.34 | 16,017,845.25 |
| ஆதனம் பொறிகள் உபகரணங்கள் கொள்வனவு | (1,770,533.15) | (1,456,424.66) |
| ஆதனம் பொறிகள் உபகரணங்கள் விற்பனைப் பெறுதிகள் | 13,200.00 | - |
| புலமைப் பரிசில் நிதியம் முதலீடு –நிலையான வைப்பு | (404,396.31) | (413,364.63) |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | **10,942,775.84** | **9,567,986.95** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| பங்கிலாபம் வழங்கல் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | - | - |
| காசு, காசுக்கு சமமானவைகளில் அதிகரிப்பு/(குறைவு) | **7,139,527.96** | **7,445,960.21** |
| வருட ஆரம்பத்தில் காசு, காசுக்கு சமமானவைகள் | 13,512,922.70 | 6,066,962.49 |
| வருட முஎவில் காசு, காசுக்கு சமமானவைகள் | **20,652,450.66** | **13,512,922.70** |

**காசு, காசுக்கு சமமானவைகள்**

| | | |
|---|---|---|
| வங்கியில் உள்ள காசு இலங்கை வங்கி -801 | 3,663,155.91 | 3,343,065.25 |
| இலங்கை வங்கி – க/இல. 764148708 | 161,076.00 | 161,076.00 |
| கேள்வி வைப்பு | 16,745,443.75 | 9,924,343.45 |
| கையிலுள்ள காசு | 82,775.00 | 84,438.00 |
| | 20,652,450.00 | 13,512,922.70 |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இத்தகைய நிதிக் கூற்றுக்களின் முக்கிய பாகத்தை உருவாக்குகின்றது. அடைப்புக்குள் காண்பிக்கப்பட்டிருப்பது குறைக்கப்பட வேண்டிய தொகைகளாகும்.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**

**"நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**2019/2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள்**

**01. பொது**

**1.1 சட்ட அந்தஸ்த்து**

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும் என்பதோடு அது இலங்கையில் அரசுரிமை கொண்ட நிறுவனமாகும். இது ஒரு பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும் என்பதோடு அதன் பிரதான வியாபார அமைவிடம் "நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05. என்ற முகவரியில் அமைந்துள்ளது.

**1.2 பிரதான செயற்பாடுகளும் மற்றும் வியாபாரத்தின் தன்மையும்**

- தொழில் ஆதரவு பயிற்சி, திறன்கள் மேம்படுத்தல் மற்றும் ஊழியர்களை மீளப் பயிற்சியளித்தல்.
- உயர்வாக பயிற்சியளிக்கப்பட்ட மற்றும் திறன் படைத்த வேலைப்படை ஒன்றை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதற்கு நிறுவனரீதியான பயிற்சியை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்தல்.
- பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் தருனர்களுக்கிடையிலான இணைப்பை ஏற்படுத்தப்படுத்தியது.

**1.3 வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதி**

2018 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதி வருடத்துக்கான வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அங்கீகாரம் பணிப்பாளர் சபையினால் 2018 மே மாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.4 தயாரிப்புக்கான அடிப்படை**

**1.4.1 இணங்குதல் கூற்று**

விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, பங்குரிமையில் மாற்றத்துக்கான கூற்று மற்றம் காசுப் பாய்ச்சல் கூற்று அத்தோடு கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ("நிதிக் கூற்றுக்கள்") என்வற்றை உள்ளடக்குகின்ற நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (SLFRS/LKAS) மற்றம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் ஏற்ப தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

**1.4.2 தொடரந்தியங்கும் கரிசனை**

தொடர்ந்தியங்கும் கரிசனை ஒன்றாக தொடர்வதற்கு கம்பனியின் இயலுமை ஒன்றை பணிப்பாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர் என்பதோடு வர்த்தகத்தை ஒன்றில் ஒடுக்குவதற்கு அல்லது நிறுத்துவதற்கு கருத்தில் கொள்ளப்பட வில்லை.

**1.4.3 முன்வைக்கின்ற அடிப்படை**

நிதிநிலைமைக் கூற்றில் உள்ள பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர்ந்த நிதிக் கூற்றுக்கள் திறண்ட அடிப்படையிலும் மற்றும் வரலாற்று கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டன.

- ஓய்வூதிய அனுகூல கடப்பாடுகள் உண்மையான மதிப்பீட்டு அடிப்படையில் பதியப்பட்டன (இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் - 19)(குறிப்பு 13)

நிதிக் கூற்றுக்களில் பணவீக்க காரணிகளுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.4.4 செயற்பாட்டு மற்றும் முன்வைத்தல் நாணயம்

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் தரப்பிட்டிருக்கின்றன என்பதோடு அதுவே கம்பனியின் செயற்பாட்டு நாணயமாகும். வேறு வகையில் குறிப்பிடப்படாத வரை சகல நிதிக் கூற்றுக்களும் அண்மைய ரூபாய்க்கு மட்டந்தட்டப்பட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

### 1.4.5 உத்தேசங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றின் பயன்பாடு

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு (இலங்கை நிதி அறிக்கைகள் தரநியமங்கள்/இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்)அமைவாக நிதிக் கூற்றுக்களை தயாரித்தலில் கணக்கீட்டு கொள்கைகளின் பிரயோகத்தையும் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் என்பவற்றையும் விளைவுக்கு உட்படுத்துகின்ற தீர்மானங்கள்,உத்தேசங்கள் மற்றும் கருதுகோள்கள் என்பவற்றை மேற்கொள்வதற்கு முகாமையை வேண்டுகின்றது.

தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பன வரலாற்று ரீதியான அனுபவம், சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக இருக்கும் என நம்பக் கூடிய எதிர்பார்ப்புக்கள் உட்பட போக்குகள் மற்றும் ஏனைய காரணிகள் என்பவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. அதற்கேற்ப, உண்மையான பெறுபேறுகள், இத்தகைய தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றிலிருந்து வித்தியாசப்படலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை ஊகங்கள் என்பன அவற்றின் வலிதான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறை அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள்,உத்தேசங்கள் திருத்தப்படுகின்ற காலத்திலும் மற்றும் ஏதேனும் எதிர்கால பாதிப்புறுகின்ற காலங்களிலும் பதிவு செய்யப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களில் பதியப்படுகின்ற தொகைகள் மீது மிகவும் குறிப்பிடத்தக்க விளைவு இருக்கின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதில் முக்கிய தீர்மானங்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன:

குறிப்பு 13 – வரையறை செய்யப்பட்ட அனுகூல கடப்பாட்டின் அளவீடு

### 1.4.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களின் முன்வைத்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன சிறந்த முன்வைப்புக்காகவும் மற்றும் நடப்பு வருடத்துடன் ஒப்பிடப்படக் கூடியதாக இருப்பதற்கும் பொருத்தமாக இருக்கின்றவிடத்து திருத்தப்படுகின்றன.

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிப்பப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. இத்தகைய கொள்கைகள் வேறு வகையில் குறிப்பிடப்படாவிட்டால். முன்வைக்கப்பட்ட சகல வருடங்களுக்கும் தொடராகப் பிரயோகிக்கப்படுகின்றன.

### 2.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகள்

நிதி நிலைமைக் கூற்றில் உள்ள சொத்துக்கள் என்பவை காசு, வங்கி நிலுவைகள் மற்றும் கம்பனியின் சாதாரண வியாபார செயற்பாட்டின் போது அல்லது அறிக்கையிடப்படுகின்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்குள் இதில் எது குறைவாக

இருக்கின்றதோ அதற்குள் காசாக மாறக் கூடியதாக எதிர்பார்க்கக் கூடியவைகள் என்பன நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நடைமுறைச் சொத்துக்கள் தவிர்ந்த அறிக்கையிடப்படுகின்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்கு அப்பால் இருக்கக் கூடியதாக கம்பனி கருதக் கூடிய சொத்துக்கள் நடைமுறையல்லாத சொத்துக்களாகும்.

### 2.1.1 **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்**

#### 2.1.1.1 **பதிவு செய்தல் மற்றும் அளவீடு**

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட மதிப்புக் குன்றுதல் இழப்புக்கள் கழித்தல் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நோக்கத்துக்கான கிரயம், கொள்வனவு கிரயம் மற்றும் சொத்தொன்றை அதன் செயற்படுகின்ற அல்லது பயன்படுத்துவதற்கு எண்ணம் கொள்கின்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாக ஏற்பட்ட திரண்ட செலவினம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயமானது, மூலப் பொருட்களுக்கான கிரயம், நேரடி தொழிலாளர், மற்றும் சொத்தை அதன் செயற்படுகின்ற அல்லது பயன்படுத்துவதற்கு எண்ணம் கொள்கின்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாக ஏற்பட்ட ஏனைய செலவினங்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன. இது மேலும் ஏற்கனவே இருக்கின்ற சொத்தை நீக்குவதற்கும் மற்றும் அகற்றுவதற்கும் ஏற்பட்ட கிரயத்தையும் உள்ளடக்குகின்றது.

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மூலதன வேலையானது சொத்தொன்றை முதலாவதாக பயன்படுத்துகின்ற நேரத்தில் அல்லது முதலாவதாக பொருத்துகின்ற நேரத்தில் உரிய சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றல் செய்யப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும், அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ளவாறான நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மூலதன வேலை இல்லை.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன வித்தியாசமான பயன்பாட்டு ஆயுள்களைக் கொண்டிருக்கின்ற போது, அவைகள் ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் (பிரதான கூறுகள்) வெவ்வேறான விடயங்களாக கணிப்பிடப்படுகின்றன.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றில் ஒன்றை விற்றுத் தீர்க்கின்ற பெறுகைகள் மற்றும் இழப்புக்கள், ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனையிலிருந்தான பெறுகைகள் மற்றும் அதன் முன் கொண்டு வருகின்ற தொகை என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாக தீர்மானிக்கப்படுகின்றன, என்பதோடு அவைகள் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் பதியப்படுகின்றன.

#### 2.1.1.2 **விளைவாந்தன்மையுடைய செலவினம்**

ஏற்கனவே இருக்கின்ற ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் மீது ஏற்படுகின்ற செலவினங்கள், ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட விடயங்களின் மிகையானது, எதிர்கால பொருளாதார அனுகூலங்களில் விளைவை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற போது மூலதனப்படுத்தப்படுகின்றது என்பதோடு அதன் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்பட முடியும். மீள் பொருத்தப்பட்ட சொத்தின் முன் கொண்டுவருதல் பெறுமதி பதிவழிக்கப்படுகின்றது.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் நாளாந்த சேவை/பராமரிப்பின் கிரயம், செலவு ஏற்படுகின்ற போது விரிவான வருமானக் கூற்றுக்களில் பதியப்படுகின்றன. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்று விற்றுத் தீர்க்கப்படுகின்ற போது, மீள் மதிப்பீட்டு மிகை ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்ட தொகை நிறுத்தி வைத்த சம்பாத்தியங்களுக்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

#### 2.1.1.3 **பதிவழித்தல்**

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் முன் கொண்டு வருதல் பெறுமதி விற்றுத் தீர்க்கின்ற போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்றுத்

தீர்த்தலிலிருந்து எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் எதிர்பார்க்கப்படாத போது பதிவழிக்கப்படுகின்றது. பதிவழிக்கின்ற போது ஏற்படுகின்ற பெறுகைகள் அல்லது இழப்புக்கள் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் பதியப்படுகின்றன.

### 2.1.1.4 **கடன் பெறுகின்ற கிரயம்**

பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு கருத்தில் கொள்ளப்பட்டதற்காக ஆயத்தமாவதற்கு கணிசமான காலம் ஒன்றை எடுக்கின்ற தகைமை பெறுகின்ற சொத்தொன்றின் கொள்வனவு, நிர்மாணிப்பு அல்லது உற்பத்திக்கு நேரடிக் காரணமக இருக்கக் கூடிய கடன் பெறுதல் கிரயங்கள் சொத்தின் பகுதி ஒன்றாக மூலதனப்படுத்தப்படுகின்றது. மூலதனப்படுத்துவதற்காக தகைமையுடைய கடன் பெறுகின்ற கிரயத் தொகைகள் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள் 23 - கடன் பெறுதல் கிரயங்களுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்றன.

மூலதனப்படுத்தப்படாத கடன் பெறுகின்ற கிரயங்கள் அவைகள் உறப்படுகின்ற காலத்தில் செலவினமாகப் பதியப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றன.

### 2.1.1.5 **பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்த்தல்**

பெறுமானத் தேய்வானது சொத்தொன்றின் கிரயமாக இருக்கின்ற அல்லது கிரயத்துக்காக பதிலீடு செய்யப்பட்ட ஏனைய தொகையாக இருக்கின்ற பெறுமானத் தேய்விடப்படக் கூடிய தொகை மீது கணிக்கப்பட்டு எஞ்சிய பெறுமதி கழிக்கப்படுகின்றது. சொத்தில் அடங்கியுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்களின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வு முறையை மிகவும் நெருக்கமாக இது பிரதிபலிப்பதால், ஒவ்வொரு சொத்தினதும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுள் மீது நேர்கோட்டு அடிப்படையொன்றில் இலாபம் அல்லது நட்டத்தில் பெறுமானத் தேய்வு பதியப்படுகின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுள் பின்வருமாறு தரப்படுகின்றது:

| | |
|---|---|
| கணனி உபகரணங்கள் | 04 வருடங்களுக்கு மேல் |
| ஏனைய அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 04 வருடங்களுக்கு மேல் |
| புதிய அலுவலக வளவு | 10 வருடங்களுக்கு மேல் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 10 வருடங்களுக்கு மேல் |

சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு அது பயன்பாட்டுக்கு வருகின்ற போது ஆரம்பிக்கின்றது, அதே நேரம் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் திகதிக்கு முன்னர் சொத்தொன்று முடிவுக்கு வருகின்றவிடத்து, அத்தகைய சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்ட சொத்தாக வகைப்படுத்தப்பட்டு அத்தகைய சொத்தின் திகதி பதிவழிக்கப்படுகின்றது.

பெறுமானத் தேய்வு முறை, பயன்பாட்டு ஆயுள் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் என்பன ஒவ்வொரு நிதி வருட முடிவிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமாக இருந்தால் சீராக்கப்படும்.

### 2.1.1.6 **நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்புக் குன்றுதல்**

சொத்தொன்று மதிப்புக் குன்றியுள்ளதா என்பதற்கான அறிகுறியொன்று உள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு திகதியிலும் கம்பனி அதனை மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி இருந்தால், அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த மதிப்புக் குன்றுதல் சோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்ற போது, அத்தகைய சொத்தின் மீட்டுக் கொள்ளப்படக் கூடிய தொகையை கம்பனி கணிப்பீடு செய்கின்றது.

சொத்தொன்று ஏனைய சொத்துக்களிலிருந்து அல்லது சொத்துக்கள் தொகுதியிலிருந்து மிகப்பாரியளவு சுயாதீனமானமாக காசுப் பாய்ச்சல்களை பிறப்பிக்காத வரையில், சொத்தொன்றின் மீட்டுக் கொள்ளக் கூடிய தொகை பயன்பாட்டில் உள்ள சொத்தொன்றின் அதி கூடிய பெறுமதியாகும், சொத்தொன்றின் முன் கொண்டு வருகின்ற தொகையானது அதன் மீட்டுக் கொள்ளக் கூடிய தொகையை விஞ்சுகின்றவிடத்து, சொத்தானது மதிப்புக் குன்றியதாகக் கருதப்பட்டு அதன் மீட்டுக் கொள்ளப்படக் கூடிய தொகைக்கு பதியப்படும்.

பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், உத்தேசிக்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், பணத்தின் நேரடிப் பெறுமதியின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற முன் வரி கழிவு வீதங்களைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கும் மற்றும் சொத்துக்கான பிரத்தியேக இடருக்கும் கழிவிடப்படுகின்றன. நியாயப் பெறுமதியை தீர்மானிப்பதில் விற்பனைக்கு கிரயத்தைக் கழிக்கப்படுகின்றது, அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் இருந்தால் அவை கணக்கில் எடுக்கப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல் இல்லாவிட்டால், ஒரு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

தொடர் நடவடிக்கைகளின் மதிப்புக் குன்றுதல் இழப்பு, மதிப்புக் குன்றிய சொத்தின் செயற்பாட்டுடன் இணங்குகின்ற அத்தகைய செலவின வகைகளில் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மதிப்புக் குன்றுதல் இழப்பானது, இறுதியாக மதிப்புக் குன்றுதல் இழப்பு பதியப்பட்டதிலிருந்து சொத்துக்களின் மீட்கக் கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றம் ஒன்று இருந்தால் மாத்திரம் திருத்தப்படும். விடயம் அவ்வாறு இருந்தால், சொத்தின் முன் கொண்டு வருகின்ற பெறுமதியானது அதன் மீட்டுக் கொள்ளக் கூடிய பெறுமதிக்கு அதிகரித்திருக்கும். முன்னைய வருடங்களில் சொத்துக்காக அத்தகைய அதிகரித்த தொகையானது தேறிய பெறுமானத் தேய்வாக தீர்மானிக்கப்பட்டிருக்கக் கூடிய் முன் கொண்டு வருகின்ற தொகையை 'விஞ்ச' மாட்டாது முன்னைய வருடங்களில் சொத்துக்காக மதிப்புக் குன்றுதல் இழப்பு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தகைய திருத்தம் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது.

### 2.1.2 நிதி சாதனங்கள்

#### 2.1.2.1 நிதிச் சொத்துக்கள்

**திறவத் தன்மை இடர்**

திறவத் தன்மை இடர் என்பது காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்தை விநியோகிக்கின்ற போது தீர்க்கப்பட்ட கம்பனியின் நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புடைய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் எதிர்நோக்குகின்ற இடராகும். கம்பனியின் கீர்த்திக்கு ஏற்றுக் கொள்ள முடியாத இழப்புக்கள் அல்லது இடரேற்படுத்துகின்ற சேதம் இடம்பெறாமல், சாதாரண மற்றும் அழுத்தமான இரண்டு நிலைமைகளின் கீழ், கம்பனியால் செலுத்த வேண்டியதாகுகின்ற அதன் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதிய திறவத் தன்மை எப்போதும் கம்பனிக்கு சாத்தியமான அளவுக்கு இருக்கின்றது, என உறுதி செய்தல் கம்பனியின் திறவத்தன்மைக்கான அணுகுமுறையாகும்.

**வட்டி இடர் வீதம்**

சந்தை வட்டி வீதங்களில் மாற்றங்களின் இடருக்கான கம்பனியின் வெளிப்பாடானது மிதக்கும் வட்டி வீதங்களுடன் கம்பனியின் நீண்ட கால கடன் கடப்பாடுகளுக்கு ஆரம்பமாக தொடர்புபடுகின்றது. நிலையான மற்றும் மாறக் கூடிய வீதக் கடன்கள் மற்றும் இரவல்கள் என்பவற்றின் சமநிலை கொள்கை ஒன்று இருப்பதன் மூலம் கம்பனியின் வட்டி வீத இடரை அது முகாமை செய்கின்றது.

### 2.1.3 வர்த்தக ரீதியாகப் பெறப்பட வேண்டியவைகள்

காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்தை பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமையொன்று கம்பனிக்கு இருக்கின்ற போதும் மற்றும் காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்தை பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமையொன்று மாத்திரம் கம்பனிக்கு இருக்கின்ற போதும் அதன் நிதி நிலைமைக் கூற்றில் நிதிச்சொத்துக்களாக வர்த்தக ரீதியாகப் பெறப்பட வேண்டியவைகளாக கம்பனி பதிவு செய்கின்றது.

வர்த்தக ரீதியாகப் பெறப்பட வேண்டியவைகள் என்பவை கம்பனியின் சாதாரண வியாபார நடவடிக்கையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது வழங்கப்பட்ட சேவைகள் என்பவற்றுக்காக வாடிக்கையாளரிடமிருந்து வருமதியாக உள்ள தொகைகளாகும். பண சேகரிப்பு ஒரு வருடத்தில் அல்லது அதற்கு குறைவான காலத்தில் எதிர்பார்க்கப்பட்டால், (அல்லது நீண்டகாலமாக இருந்தால், வியாபாரத்தின் சாதாரண செயற்பாட்டு வட்டத்தில்), அவைகள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இல்லாவிட்டால், அவைகள் நடைமுறையல்லாத சொத்துக்களாக முன்வைக்கப்படுகின்றன.

வர்த்தக ரீதியாகப் பெறப்பட வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன. அதன் பின்னர் கம்பனி அளவீடுகளை முன்னெடுக்கின்றது.

பயன் விளைவுடைய வட்டி முறையைப் பயன்படுத்தி கடன் தீர்ப்பனவுக் கிரயத்தில் வர்த்தக ரீதியன பெறுவனவுகள், மதிப்புக் குன்றுதலுக்கான ஏற்பாட்டை கழிக்கவும்.

பெறப்பட வேண்டியவைகளின் அசல் நியதிகளுக்கு ஏற்ப, சகல தொகைகளையும் கம்பனிக்கு சேகரிக்க முடியாததாக இருக்கின்ற புறநிலைச் சான்று இருக்கின்ற போது வர்த்தக ரீதியாகப் பெறப்பட வேண்டியவைகளுக்காக ஏற்பாடொன்றை கம்பனி தாபிக்கின்றது.

### 2.1.4 காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்

காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் என்பவை காசு நிலுவைகள், அழைப்பு வைப்புக்கள், கோரிக்கை வைப்புக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்துக்காக கோரிக்கை மேற்கொள்ளப்படுகின்ற போது திருப்பிச் செலுத்தப்படக்கூடிய வங்கி மேலதிகப் பற்றுக்களின் தேறிய பெறுமதியில் மாற்றங்களின் குறிப்பிடத்தக்க இடருக்கு அமைவாகவும் காசின் அறியப்பட்ட தொகைகளுக்கு மாற்றுவதற்கு தயாராக இருக்கக் கூடிய குறுங்கால உயர் திறவத்தன்மையுடைய முதலீடுகள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

### 2.1.5 கூறப்பட்ட மூலதனம்

பங்குகள் வழங்குதல் தொடர்பிலும் மற்றும் பங்குகள் மீதான அழைப்புக்கள் தொடர்பிலும் கம்பனியால் பெறப்பட்ட சகல தொகைகள் அல்லது கம்பனிக்கு வருமதியானதும் மற்றும் செலுத்தப்பட வேண்டியதுமான தொகைகளின் மொத்தம் கூறப்பட்ட மூலதனம் உள்ளடக்குகின்றது.

### 2.1.6 வர்த்தக ரீதியாக செலுத்தப்பட வேண்டியவைகள்

காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்தை விநியோகிப்பதற்கான ஒப்பந்த ரீதியான கடப்பாடொன்று கம்பனிக்கு இருக்கின்ற போதும் மற்றும் அத்தகைய கடப்பாடொன்று மாத்திரம் இருக்கின்ற போதும் அதன் நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக ரீதியாகப் செலுத்தப்பட வேண்டியவைகள் நிதிப் பொறுப்புக்களாக கம்பனி பதிவு செய்கின்றது.

விநியோகத்தர்களிடமிருந்து சாதாரண வியாபார நடைமுறையில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்காக செலுத்துவதற்கு உள்ள கடப்பாடுகள் வர்த்தக ரீதியாகச் செலுத்தப்பட வேண்டியவைகளாகும். ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதிக்கு (அல்லது நீண்டகாலமாக இருந்தால், வியாபாரத்தின் சாதாரண செயற்பாட்டு வட்டத்தில்), அவைகள் நடைமுறைச் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இல்லாவிட்டால், அவைகள் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக முன்வைக்கப்படுகின்றன.

வர்த்தக ரீதியாகப் செலுத்தப்பட வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன. அதன் பின்னர் பயன்விளைவுடைய வட்டி முறையைப் பயன்படுத்தி கடன் தீர்ப்பனவுக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

கோரிக்கை விடுக்கப்படுகின்ற போது கொடுப்பனவு அல்லது அறிக்கையிடப்படுகின்ற திகதியிலிருந்து ஒருவருடத்துக்குள் வருமதியாக உள்ளவைகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாகப் பதியப்படுகின்றன. அறிக்கையிடப்படுகின்ற திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குப் பின்னரான கொடுப்பனவுக்காக ஏற்படுகின்ற செலுத்தப்பட வேண்டியவைகள் நிலுவைகள் நடைமுறையல்லாத பொறுப்புக்களாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் சகல அறிந்த பொறுப்புக்களும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக நம்பகமாக உத்தேசிக்கப்படக் கூடிய நடைமுறை சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு ஒன்று கம்பனிக்கு இருந்தால், மற்றும் கடப்பாட்டை தீர்ப்பதற்கு தேவைப்படக் கூடிய பொருளாதார அனுகூலத்தின் வெளிப்பாய்ச்சல் ஒன்றுக்கான சாத்தியம் இருந்தால் ஏற்பாடொன்று பதியப்படுகின்றது.

### 2.2.1 ஊழியர் அனுகூலங்கள்

#### 2.2.1.1 வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.

வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது தொழிலுக்குப் பிந்திய அனுகூலத்திட்டமாகும் என்பதோடு அதன் கீழ் தனியாக நிறுவனமொன்றுக்கு நிலையான பங்களிப்புக்களை நிறுவனம் ஒன்று செலுத்துகின்றது என்பதோடு மேலதிக தொகைகளைச் செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான

கடப்பாடு இருக்க மாட்டாது. வரையறை செய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டங்களுக்கான பங்களிப்புக்களுக்கான கடப்பாடுகள், ஊழியர்கள் தமது சேவைகளை வழங்குகின்ற காலங்களில் இலாபம் அல்லது நட்டத்தில் ஊழியர் அனுகூல செலவினம் ஒன்றாகப் பதியப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியர்களின் மொத்த வேதனத்திலிருந்து 12% சதவீதத்தை கம்பனி பங்களிப்புச் செய்கின்றது.

ஊழியர்களின் மொத்த வேதனத்திலிருந்து 3% சதவீதத்தை கம்பனி பங்களிப்புச் செய்கின்ற ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்காக சகல ஊழியர்களும் தகவுடையவர்களாவர்.

#### 2.2.1.2 வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டம் - ஓய்வூதிய பணிக்கொடை

வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டம் என்பது ஓய்வூதியத்தின் போது ஊழியர் ஒருவருக்கு அனுகூலத் தொகையொன்று கிடைக்கப் பெறும் என வரையறை செய்கின்றது, வழமையாக வயது, சேவை வருடங்கள் மற்றும் நட்டஈடு போன்ற, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகள் மீது தங்கியுள்ளது. சகல தகைமையுடைய ஊழியர்களுக்காகவும் 1983ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் வேண்டப்பட்டவாறு வரையறை செய்யப்பட்ட அனுகூலத்திட்டம் ஒன்றை கம்பனி தயாரித்துள்ளது.

வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்கள் தொடர்பில் நிதிநிலைமைக் கூற்றில் பதியப்பட்ட பொறுப்பு என்பது அறிக்கையிடப்டுகின்ற திகதியில் பதியப்படாத கடந்த கால சேவைக் கிரயத்துக்கான சீராக்கல்களுடன் சேர்த்து வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டத்தின்நடைமுறைப் பெறுமதியாகும். வரையறை செய்யப்பட்ட அனுகூல கடப்பாடானது, இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் 19; ஊழியர் அனுகூலங்களில் விபரிக்கப்பட்ட எதிர்வு கூறப்பட்ட அலகு கடன் முறையைப் பயன்படுத்தி கம்பனியால் வருடாந்தம் கணக்கிடப்படுகின்றது. வரையறை செய்யப்பட்ட அனுகூல கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதியானது அனுகூலம் செலுத்தப்படக் கூடிய நாணயத்தில் வகுக்கப்பட்ட அரசாங்கத்தின் முறிகள் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி உத்தேசிக்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களைக் கழிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது, என்பதோடு அது தொடர்புடைய ஓய்வூதிய பொறுப்பின் காலங்களுக்கு அண்ணளவாகக் கூடிய முதிர்ச்சிக் காலங்களைக் கொண்டிருக்கின்றது.

உண்மையான கருதுகோள்களில் சீராக்கல்கள் மற்றும் மாற்றங்கள் என்பவற்றை அனுபவிப்பதிலிருந்து எழுகின்ற பெறுகைகள் மற்றும் இழப்புக்கள், அவை எழுகின்ற காலத்தில் ஏனைய விரிவான வருமானத்தில் பதியப்படுகின்றது அல்லது வரவு வைக்கப்படுகின்றது.

திட்டத்துக்கான மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட கால நேரத்துக்காக (முடிவெடுக்கும் காலம்) சேவையில் எஞ்சியிருக்கின்ற ஊழியர்களக் மீதான நிபந்தனை உடையதாக இல்லாத வரை, கடந்த கால சேவைக் கிரயங்கள் உடனடியாக விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. இந்த விடயத்தில், கடந்த கால சேவைக் கிரயங்கள் முடிவெடுக்கும் காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படை ஒன்றில் நிலைமாற்றப்படுகின்றது.

1983ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஊழியர் ஒருவர் 5 வருடகால தொடர் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் மாத்திரமே அதற்கான பொறுப்பு எழுகின்றது.

ஓய்வூதிய அனுகூல கடப்பாடுகளை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிரதான கருதுகோள்கள் குறிப்பு 13 இல் தரப்பட்டுள்ளன.

### 2.3 மூலதன அர்ப்பணிப்புக்கள் மற்றும் எதிர்பாரத விடயங்கள்

எதிர்பாராத விடயங்கள் என்பவை கடந்த கால நிகழ்வொன்றிலிருந்து எழுகின்ற சாத்தியமுள்ள சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் ஆகும் என்பதோடு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் இடம்பெறுதல் அல்லது இடம்பெறாமை தொடர்பில் மாத்திரம்

உறுதிப்படுத்தப்படும், அவை கம்பனியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்களாகும்.

சகல முக்கிய மூலதன அர்ப்பணிப்புக்கள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள் குறிப்பு 18 இல் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

### 2.4 விரிவான வருமானக் கூற்று

விரிவான வருமானக் கூற்றின் முன்வைத்தல் நோக்கத்துக்காக செலவின முறையின் பணியானது கம்பனியின் செயலாற்றுகையின் பகுதிகளை நியாயமாக முன்வைக்கின்றது என பணிப்பாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர், என்பதோடு எனவே அத்தகைய முன்வைப்பு முறை இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் 1 – நிதிக் கூற்றுக்களின் முன்வைத்தல் ஏற்பாட்டுக்கு இணங்குவதில் அத்தகைய முன்வைத்தல் முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

#### 2.4.1 வருமானப் பதிவு

கம்பனிக்கு பொருளாதார அனுகூலங்கள் வருவதற்கு சாத்தியமான அளவுக்கு வருமானம் பதியப்படுகின்றது என்பதோடு ஏற்பட்ட வருமானம் மற்றும் தொடர்புடைய கிரயங்கள் அல்லது ஏற்படவுள்ள வருமானம் மற்றும் தொடர்புடைய கிரயங்கள் நம்பகமாக அளவிடப்பட முடியும். கம்பனிக்குள் விற்பனைகளை வெளிப்படுத்திய

பின்னர் கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்கப் பெற வேண்டிய தொகையின், வர்த்தகக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகளின் தேறிய தொகைகள் நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது. வருமானத்தின் பதிவின் நோக்கத்துக்காக பின்வரும் பிரத்தியேக தகுவிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

##### 2.4.1.1 சேவைகளை வழங்குதல்

சேவைகள் வழங்குவதிலிருந்தான வருமானங்கள் சேவைகள் வழங்கப்பட்ட புரியப்பட்ட காலத்தில் கணக்கில் பதியப்படுகின்றன.

##### 2.4.1.2 வட்டி வருமானம்

வட்டி வருமானமானது அதன் சேகரிப்பில் ஐயப்பாடு இல்லாமல் இருந்தால் (சொத்தின் மீது விளைபயனுடைய விளைவுகணக்கில் எடுப்பதன் மூலம்) திரண்ட வட்டியாகப் பதியப்படுகின்றது.

##### 2.4.1.3 விற்றுத் தீர்த்தல் தொடர்பில் பெறுகைகள் அல்லது இழப்புக்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விடயம் ஒன்றின் விற்றுத் தீர்த்தல் தொடர்பிலான பெறுகைகள் அல்லது இழப்புக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் முன் கொண்டுவருதல் தொகைகளுடன் தேறிய விற்பனை பெறுகைகளை ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன.

#### 2.4.2 செலவினத்தைப் பதிவு செய்தல்

##### 2.4.2.1 நடவடிக்கை செலவினம்

வியாபாரத்தின் நாளுக்கு நாள் நடவடிக்கைகள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சிறந்த பயன் விளைவில் பராமரிப்பதிலும் ஏற்பட்ட சகல செலவினங்கள் என்பவை வருடத்துக்கான இலாபம்/(நட்டத்தைப்) பெறுவதில் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. நிதியல்லாத சொத்துக்கள், சகல அறியப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு என்பவற்றின் மதிப்புக் குன்றுதலுக்காக ஏற்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

நிருவாகச் செலவின் சதவீதம் நிகழ்ச்சிக்குரிய கிரயமாக பதியப்பட்டிருக்கின்றது என்பதோடு மொத்த இலாபத்தை அடைவதற்கு நேரடிக் கிரயமாக கருதப்படுகின்றது. விநியோகக் கிரயத்தின் வீதம் பின்வருமாறு:

| | |
|---|---|
| எழுதுகருவிகள் | 75% |
| தொலைபேசி | 90% |
| எரிபொருள் | 60% |
| போக்குவரத்து | 60% |
| மேலதிக நேரம் | 50% |
| முத்திரை வரி | 100% |

### 2.4.2.2 வரிச் செலவினம்

வருமான வரிச் செலவினம் என்பது நடைமுறை மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி என்பவற்றை உள்ளடக்குகின்றது. வருமான வரிச் செலவினமானது,பங்கு முலீட்டில் பதியப்படுகின்ற போது பங்கு முதலில் நேரடியாகப் பதியப்பட்ட விடயங்களுக்கு அது தொடர்புபடுகின்ற அளவுக்கு தவிர்த்து விரிவான வருமானக் கூற்றில் பதியப்பட்டிருக்கின்றது.

### 2.4.2.2.1 நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலங்களுக்கான நடைமுறை வரிச் செலவினம், விளைவாந்தன்மையுடைய சட்டவாக்கத்தினால் அல்லது அறிக்கையிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் உண்மையாக சட்டவாக்கத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப கணிப்பிடப்பட்ட மதிப்பீட்டு வருடம் தொடர்பாக வரியிடப்படக் கூடிய வருமானம் தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமை அதிபருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படக் கூடியதாக எதிர்பார்க்கப்படுகின்ற தொகையில் அளவிடப்படுகின்றன.

### 2.4.2.2.2 ஒத்திவைக்கப்பட்ட வரியீடு

ஓத்திவைக்கப்பட்ட வரியீடானது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முன் கொண்டுவருதல் தொகைகள் மற்றும் வரியீட்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட தொகைகள் என்பவற்றுக்கிடையிலான தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பில், ஐந்தொகைப் பொறுப்பு முறையைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது.

ஓத்தி வைக்கப்பட்ட வரியானது பின்வரும் தற்காலிக வித்தியாசங்களுக்காகப் பதியப்படுவதில்லை: வியாபாரச் சேர்க்கை அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப பதிவு மற்றும் அது ஒன்றில் கணக்கீட்டில் அல்லது வரியிடப்படக் கூடிய இலாபம் அல்லது நட்டத்தில் விளைவுகளை ஏற்படுத்துவதில், மற்றும் தென்படக் கூடிய எதிர்காலத்தில் அவைகள் அதனைத்திருத்தவதற்கு சாத்தியமுள்ள அளவுக்கு கூட்டாக கட்டுப்படுத்தப்படுகின்ற துணைக் கம்பனிகளில் மற்றும் கூட்டாக கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களிலும் முதலீடுகள் தொடர்பான வித்தியாசங்கள். மேலும், ஒத்திவைக்கப்பட்ட வரியானது, நன்மதிப்பின் ஆரம்ப பதிவு மீது எழுகின்ற வரியிடப்படக் கூடிய தற்காலிக வித்தியாசங்களுக்காக பதியப்படுவதில்லை.

ஓத்தி வைக்கப்பட்ட வரியானது, சட்டமாக்கப்படுகின்ற அல்லது அறிக்கையிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் உண்மையாக சட்டமாக்கப்படுகின்ற சட்டங்களின் அடிப்படையில் அவைகள் திருத்தப்படுகின்ற போது தற்காலிக வித்தியாசங்களுக்கு பிரயோகிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற வரி வீதங்களில் அளவிடப்பட்டிருக்கின்றது. ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்தொன்று அவை பயன்படுத்தப்படக் கூடியதற்கு எதிராக இருக்கக் கூடிய எதிர்கால வரியிடப்படக் கூடியஇலாபங்கள்இருகக்கக் கூடிய அளவுக்கு பயன்படுத்தாத வரி இழப்புக்கள், வரி கடன்கள் மற்றும் கழிக்கப்படக் கூடிய தற்காலிக வித்தியாசங்கள் என்பவற்றுக்காக பதிவு செய்யப்படுகின்றது. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படுகின்ற திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்புடைய வரி அனுகூலம் பணமாகும் என்ற சாத்தியம் இல்லாத அளவுக்கு குறைக்கப்படும்.

நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறைச் சொத்துக்களை தீர்ப்பதற்கு சட்டரீதியாக அமுல்படுத்தக் கூடிய உரிமை இருந்தால், மற்றும் அதே வரியிடப்படக் கூடிய நிறுவனத்துக்கும் மற்றும் அதே வரியிடப்படக் கூடிய அதிகார சபைக்கும் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் தொடர்புடையதாக இருக்கின்ற போதும் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் தீர்க்கப்படுகின்றன.

**2.5 காசுப் பாய்ச்சல் கூற்று**

'மறைமுக முறை' யைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கின்றது. காசுப் பாய்ச்சல் கூற்றின் சமர்ப்பித்தல் நோக்கத்துக்காக கிடைக்கப் பெற்ற வட்டி மற்றும் கிடைக்கப் பெற்ற பங்கிலாபங்கள் என்பவை முதலீட்டு காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்ற அதே நேரம் செலுத்திய குத்தகை வாடகை, செலுத்திய பங்கிலாபம் மற்றும் கிடைக்கப் பெற்ற உதவு தொகைகள்நிதிப்படுத்தல் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றன.

**2.6 பங்கொன்றுக்கான சம்பாத்தியங்கள்**

கம்பனி அதன் சாதாரண பங்குகளுக்காக பங்கொன்றுக்கான அடிப்படை சம்பாத்திய தரவை முன்வைக்கின்றது. பங்கொன்றுக்கான அடிப்படை சம்பாத்தியமானது, குறிப்பிட்ட காலத்தின் போது நிலுவையாக உள்ள நிறையிடப்பட்ட சராசிரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கையால், கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்கு சேரவேண்டிய இலாபம் அல்லது நட்டத்தை வகுப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

**2.7 அறிக்கையிப்படுகின்ற காலத்துக்குப் பின்னர் நிகழ்வுகள்**

அறிக்கையிப்படுகின்ற காலத்துக்குப் பின்னர் நிகழ்வுகள் என்பது அறிக்கையிடப்படுகின்ற காலத்தின் முடிவுத் திகதி மற்றும் நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி என்பவற்றுக்கிடையில் இடம்பெறுகின்ற சாதகமான மற்றும் சாதகமற்ற நிகழ்வுகளாகும். அறிக்கையிடப்படுகின்ற காலத்துக்குப் பின்னர் நிகழ்கின்ற நிகழ்வுகளின் முக்கியத்துவம் கருத்தில் கொள்ளப்படும் என்பதோடு தேவைப்படுகின்ற விடத்து நிதிக் கூற்றுக்களில் ஏற்புடைய சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**

**"நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2020 மார்ச் 31ந் திகதிக்கான நிதிக் கூற்று**

| குறிப்பு 03 – வருமானம் | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|
| நிகழ்ச்சி வருமானம் | 33,751,950.00 | 31,035,700.00 |
| வாடிக்கையாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் | 17,841,010.00 | 22,195,850.00 |
| கல்விசார் பயிற்சி நெறிகள் | 3,191,000.00 | 3,25,00.00 |
| சர்வதேச நிகழ்ச்சிகள் வருமானம் | 14,700,000.00 | 32,503,136.00 |
| ஏனைய விற்பனைகள் | 122,000.00 | 505,900.00 |
| | 69,605,960.00 | 89,465,586.00 |

| குறிப்பு 04 – விற்பனைக் கிரயம் | | |
|---|---|---|
| தொடக்கப் பொருட்கள் படிவம் | 662,755.72 | 797,521.22 |
| விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சிகள் | 292,814.00 | 106,837.50 |
| வளவாளர் கட்டணங்கள் திறந்த நிகழ்ச்சிகள் | 3,528,270.00 | 3,226,300.00 |
| வளவாளர் கட்டணங்கள் - வாடிக்கையாக்கப்பட்டது | 2,751,550.00 | 4,515,055.00 |
| வளவாளர் கட்டணங்கள் - கல்விசார் | 918,600.00 | 989,900.00 |
| தபால் - நிகழ்ச்சிகள் | 600,618.00 | 462,610.00 |
| நிகழ்ச்சிக்குரிய செலவினம் | 1,484,915.00 | 828,357.00 |
| பிரயாணச் செலவினம், நாளாந்த ஜீவனம் – நிகழ்ச்சி | 137,429.00 | 158,523.00 |
| மண்டபக் கட்டணம் | 736,179.78 | 137,000.00 |
| சிற்றுண்டிகள் - திறந்த நிகழ்ச்சிகள் | 4,753,69.00 | 3,896,202.50 |

| | | |
|---|---|---|
| சிற்றுண்டிகள் - வாடிக்கையாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் | 1,641,310.00 | 2,569,380.00 |
| சிற்றுண்டிகள் - கல்விசார் நிகழ்ச்சிகள் | 290,900.00 | 301,496.00 |
| காகிதாகிகள் மற்றும் அச்சிடுதல் | 45,850.00 | 309,130.00 |
| எரிபொருள் - நிகழ்ச்சிகள் | 104,800.00 | 110,005.00 |
| OBTசெலவினம் | 1,536,652.20 | 221,762.20 |
| ஏனைய நிகழ்ச்சிகள் செலவினம் | - | 1,500.00 |
| CSRநிகழ்ச்சிகள் செலவினம் | **12,500.00** | - |
| ஜீவனம் | 1,148,700.00 | 808,200.00 |
| சர்வதேச நிகழ்ச்சிகள் செலவினம் | 13,005,456.66 | 27,878,677.37 |
| குறைந்த இணைப்பு இன்வென்டரி | (658,347.60) | (662,755.20) |
| | 32,994,642.56 | 46,655,701.07 |

**குறிப்பு 05 – ஏனைய வருமானம்/(செலவினம்)**

| | | |
|---|---|---|
| ஆலோசனை மற்றும் ஏனைய சேவை | 2,500.00 | 8,500.00 |
| | **2,500.00** | 8,500.00 |

**குறிப்பு 06 – நிர்வாக மற்றும் தாபனச் செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 17,015,542.55 | 16,770,517.88 |
| தலைவருக்கான கொடுப்பனவு | 1,108,684.52 | 1,041,847.43 |
| தலைவருக்கான வாகனக் கொடுப்பனவு | 250,000.00 | 453,548.55 |
| தலைவருக்கான சிற்றுண்டிக் கொடுப்பனவு | 50,483.87 | 45,774.14 |
| முகாமைத்துவப் பணிப்பாளர் கொடுப்பனவு | 1,065,027.42 | 830,450.00 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 70,550.33 | 2,057,489.33 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 1,972,157.80 | 520,869.86 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 501,984.66 | 851,420.00 |
| ஊழியர் நலன்புரி | 610,286.00 | 851,420.00 |
| அலுவலக வாகனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 1,675,460.00 | 1,215,095.00 |
| பணிக்கொடை | 706,397.00 | 631,168.00 |
| ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 2,266,500.00 | 2,638,750.00 |

**குறிப்பு 06 – பெறுமானத்தேய்வு**

| | | |
|---|---|---|
| தளபாடம் பொருத்திகள் | 251,090.85 | 216,067.00 |
| அலுவலக உபகரணங்கள் | 801,594.49 | 875,328.59 |
| மோட்டார் வாகனம் | - | 956,249.76 |
| கணனி உபகரங்கள் | 979,902.15 | 927,154.11 |
| புதிய அலுவலக வளவு | 796,972.32 | 702,906.27 |
| இணையப் பக்கங்கள் | 124,898.88 | 58,783.57 |
| கணக்கீட்டு பொதியைப் பராமரித்தல் | 685,236.00 | 1,222,156.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 272,980.00 | 190,000.00 |
| சட்ட மற்றும் செயலாளர் சேவை | 200,299.89 | 198,561.14 |
| தபால் கட்டணங்கள் | 37,876.00 | 80,430.00 |
| காகிதாகிகள் | 2,098,470.50 | 1,466,780.00 |
| அச்சடித்தல் | 640,302.00 | 905,544.50 |
| தொலைபேசி | 1,301,989.31 | 1,179,289.00 |
| போக்குவரத்து | 613,378.77 | 405,210.00 |
| கணக்கீடு மற்றும் தொழில்சார் கட்டணங்கள் | 477,535.00 | 153,435.00 |
| மின்சாரம் | 981,721.53 | 949,120.99 |
| நீர் | 41,917.02 | 55,453.69 |
| சுத்திகரித்தல் சேவை | 531,617.64 | 579,514.70 |
| காப்புறுதி – வாகனம் | 160,958.46 | 153,199.46 |
| பாதுகாப்பு சேவைக் கட்டணங்கள் | 1,526,071.48 | 1,628,750.88 |
| ஊழியர்கள் பயிற்சி மற்றும் விருத்தி | 548,532.80 | 172,489.00 |
| எரிபொருள் | 130,770.00 | 172,489.00 |

| | | |
|---|---|---|
| வாகனம் திருத்துல், பராமரிப்பு | 286,917.00 | 537,518.00 |
| பராமரிப்புக் கட்டணங்கள் | 780,285.00 | 499,403.00 |
| அலுவலக உபகரணங்களைப் பராமரித்தல் | 189,650.20 | 443,264.94 |
| குளிரூட்டி திருத்தமும் பராமரிப்பும் | 294,146.13 | - |
| பணிப்பாளர்கள் வரவுக் கட்டணங்கள் | 87,500.00 | 209,500.00 |
| பணிப்பாளர்களுக்கான போக்குவரத்து கட்டணங்கள் | 62,500.00 | 72,500.00 |
| கணக்காய்வு, முகாமை சபைக்கான கட்டணங்கள் | 90,000.00 | 80,000.00 |
| முகாமை சபைக்கான சிற்றுண்டிகள் | 58,467.00 | 36,850.00 |
| கணினி பராமரித்தல் | 226,240.00 | 25,900.00 |
| வாகனக் கூலி | 755,600.00 | - |
| நன்கொடைகள் | 35,000.00 | 25,000.00 |
| செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் | **77,170.00** | 168,160.00 |
| விழாக்கள் மற்றும் செலவினம் | 201,043.00 | 177,769.00 |
| வங்கிக் கட்டணங்கள் | 85,454.95 | 90,556.17 |
| இணையத்தளத்தை நடாத்துதல் | 32,840.00 | 27,000.00 |
| சபைக் கூட்டங்களுக்கான கொடுப்பனவு | 117,000.00 | - |
| கொடுப்பனவாளர்கள் | 135,667.00 | 383,396.00 |
| பெறுமதிக்கான வரி | 35,000.00 | - |
| கட்டணமும் வெட் வரியும் | - | 136,080.00 |
| விளம்பரம் | 69,250.50 | - |
| காப்புறுதி | 75,500.00 | - |
| மின்னஞ்சல் மற்றும் இணையத்ள கட்டணம் | 19,440.00 | - |
| FA நிராகரிப்பு நட்டம் | 29,403.16 | - |
| ஏனைய செலவுகள் | 40,000.00 | - |
| | 45,026,558.85 | 44,094,008.22 |

**<u>குறிப்பு 07</u> – தேறிய நிதி வருமானம்**

| | | |
|---|---|---|
| வட்டி வருமானம் - ஊழியர் கடன் | 107,663.00 | 101,822.00 |
| வட்டி வருமானம் - நிலையான வைப்பு | 13,755,607.41 | 15,628,332.66 |
| வட்டி வருமானம் - கேள்வி வைப்பு | 412,164.93 | 287,690.59 |
| | 14,275,164.93 | 16,017,845.25 |

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**
**"நிபுனதா பியச" 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**2020 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று**

**குறிப்பு 08 – ஆதனம் பொறிகள் உபகரணங்கள்**

| ஆதனம் பொறிகள் உபகரணங்கள் | வீதம் | கிரயம் | | | பெறுமானத்தேய்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2019.04.01** உள்ளவாறான நிலுவை | சேர்த்தல்/ (குறைத்தல்) | **2020.03.31** உள்ளவாறான நிலுவை | **2019.04.01** உள்ளவாறான நிலுவை | வருடத்தக்கான கட்டணம் | **2020.03.31** உள்ளவாறான நிலுவை | **WDV 31.03.2018** |
| | | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| தளபாடங்கள், பொருத்திகள் | 10% | 3,013,188.74 | 57,693.82 | 1,786,014.54 | 221,195.92 | 216,067.70 | 2,007,210.46 | 1,063,672.10 |
| அலுவலக உபகரணங்கள் | 20% | 6,513,319.04 | (363,673.00) | 4,705,703.50 | 20,431.70 | 875,328.59 | 4,726,135.20 | 1,423,510.84 |
| மோட்டார் வாகனம் | 25% | 11,253,125.00 | - | 11,253,125.00 | - | 956,249.76 | 11,253,125.00 | - |
| கணனி உபகரணங்கள் | 25% | 5,897,899.00 | 54,827.33 | 4,120,668.76 | 384,067.43 | 927,154,11 | 4,504,736.19 | 1,447,990.84 |
| புதிய அலுவலக வளவு | 10% | 7,947,948.11 | - | 4,811,688.51 | 796,972.32 | 702,906.27 | 5,608,660.83 | 2,339,287.28 |
| இணையத் தளங்கள் | 25% | 260,600.00 | 572,189.40 | 138,750.24 | 124,898.88 | 58,783.57 | 263,649.12 | 569,140.28 |
| | | **34,866,079.89** | **35,207,117.44** | **26,815,950.55** | **1,547,566.25** | **3,736,490.00** | **28,363,516.80** | **6,843,140.64** |

**குறிப்பு 09 – முதலீடுகள்**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு - இலங்கை வங்கி | 13,897,430.80 | 12,726,500.76 |
| நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 140,000,000.00 | 140,000,000.00 |
| | 153,897,430.80 | 152,726,500.76 |

**குறிப்பு 10 –**
**வர்த்தக மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவைகள்**

| | | |
|---|---|---|
| முற்செலுத்திய காப்புறுதி | 65,661.68 | 65,661.68 |
| அறவிடப்பட வேண்டிய வட்டி | 2,304,558.65 | 2,633,931.09 |
| அறவிடப்பட வேண்டிய நிறுத்தி வைத்த வரி | 1,315,549.29 | 865,103.99 |
| ஊழியர் இடர் கடன் | 1,749,976.88 | 1,889,902.88 |
| முற்பணம் | 229,940.23 | 464,955.00 |
| வர்த்தகக் கடன்பட்டோர்கள் | 16,791,953.80 | 18,358,153.80 |
| முற்செலுத்திய வாடகை – அலுவலக வளவு | 45,360.00 | 45,360.00 |
| சும்பள முற்பணம் | 14,000.00 | 10,000.00 |
| திருப்பிச் செலுத்தக்கூடிய வைப்பு | - | 1,000.00 |
| | 22,517,000.53 | 24,334,068.44 |

**குறிப்பு 11 – காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி – க/இ 801 | 3,343,065.25 | 3,343,065.25 |
| கேள்வி வைப்பு | 7,655,327.94 | 7,655,327.94 |
| இலங்கை வங்கி க/இல. 76148708 | 161,076.00 | 161,076.00 |
| கையிலுள்ள காசு | 84,438.00 | 84,438.00 |
| | 20,652,450.66 | 13,512,922.70 |

**குறிப்பு 12 – குறிப்பிட்ட மூலதனம்**

| | | |
|---|---|---|
| முழுமையாகச் செலுத்திய சாதாரண பங்குகள் மற்றும் ஒரு தங்க பங்கு | 102,001,520.00 | 102,001,520.00 |
| | 102,001,520.00 | 102,001,520.00 |

**குறிப்பு 13 – ஓய்வூதிய அனுகூலக் கடப்பாடு – பணிக்கொடை**

| | 2019/2020<br>ரூ. சதம் | 2017/2018<br>ரூ. சதம் |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் நிலுவை | 3,147,364.00 | 2,639,217.00 |
| வருடத்தில் அறவிடப்பட்டவைகள் | 706,397.00 | 631,168.00 |
| வருடத்தில் மேற்கொண்ட/மாற்றல் செய்த கொடுப்பனவு | (130,235.00) | (320,792.00) |
| வருட இறுதியில் நிலுவை | (498,179.00) | 197,771.00 |
| | 3,225,347.00 | 3,147,364.00 |

நிதியத்தின் ஊழியர்கள் தொடர்பிலான பணிக்கொடை 31.03.2020 திகதியில் உண்மையான மதிப்பிடல் முறையின் அடிப்படையில் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப LKAS 19 இற்கு ஏற்ப நடைமுறை சேவை செலவினம் ரூ. 706,397.00 தொகை கடந்த கால சேவைச் செலவினம் என அடையாளம் காணப்பட்டது.

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**

**“நிபுனதா பியச” 7ஆம் மாடி, 354/2, எல்விடிகல மாவத, கொழும்பு 05.**

**2020 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான**

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2020**

**12.1 தங்க பங்கு உரிமையாளர்கள்**

தற்போது தங்க பங்குரிமையாளராக இருப்பது திறைசேரியின் செயலாளராவார் என்பதோடு, தங்க பங்கின் உரிமை உடையவராக இருப்பது ஒன்றில் திறைசேரியின் செயலாளர் இல்லாவிட்டால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பிலதனது சொந்தப் பெயரில் அல்லாமல் அவரின் உத்தியோக பூர்வ பதவியின் அடிப்படையில் ‘நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் ஒருவர்’ மாத்திரமாகும். சாதாரண பங்குரிமையாளர்களுக்கு இருக்கின்ற உரிமைகளுக்கு மேலதிகமாக தங்க பங்குரிமையாளருக்கு உள்ள விசேட உரிமைகள் பின்வருமாறு:

12.1.1 பொதுக் கூட்டத்தில் அல்லது வேறு சந்தர்ப்பத்தில் நிறைவேற்றப்படுகின்ற எந்தவித சாதாரண, விசேட அல்லது அதி விசேட தீர்மானமொன்று, அந்த சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கரிசனை கொள்கின்ற போது அத்தகைய தீர்மானம் ஒன்றில் கம்பனியின் பணிநோக்கு, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றுக் முரணாக அல்லது அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்ககாததாகக் காணப்பட்டால்“தங்க பங்குரிமையாளர்” அத்தகைய தீர்மானத்தை நிராகரிக்கலாம்.

12.1.2 ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட கம்பனியின் அமைப்பு அகவிதியை ‘விசேட தீர்மானத்தினால் காலத்துக்கு காலம் திருத்தலாம், ஆயினும்,‘தங்க பங்கு’ மற்றும் ‘தங்க பங்குரிமையாளர்’ ஆகிய பதங்களினதும் மற்றும் தங்கப் பங்குரிமையாளரின் உரிமைகள் தொடர்பான எவையேனும் உறுப்புரைகள் வரைவிலக்கணத்தை திருத்துவதற்கு தங்கப் பங்குரிமையாளரின் சம்மதத்தை முதலில் எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

12.1.3 தங்கப் பங்காளரோடு மற்றும் அல்லது அவரது நியமனதாரிகளையும் மற்றும் பணிப்பாளர்களையும் சந்திப்பதற்கு விரும்பினால் ஒவ்வொரு மூன்று மாங்களுக்கு ஒருமுறையும் கம்பனியின் பணிப்பாளர்களை கூட்டுவதற்கான தகைமையை ‘தங்க பங்காளர்’ கொண்டிருக்கின்றார், அவ்வாறு கூட்டப்பட்டால், தங்கப் பங்காளரை மற்றும் அல்லது அவரின் நியமனதாரிகளை சந்தித்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அக்கறை தொடர்பில் கம்பனியின் விடயங்களை கலந்துரையாட வேண்டும்.

12.1.4 தங்கப் பங்காளரின் எழுத்து மூல சம்மதத்தை வழங்கியும் மற்றும் பெரும்பான்மை பங்குரிமையாளர்களின் சம்மதத்துடனும் தங்கப் பங்காளர் சாதாரண பங்காளர் ஒருவராக மாற்றப்பட முடியும்.

12.1.5 தங்கப் பங்காளர் மற்றும்/ அல்லது அவரால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படும் நபர்கள் கம்பனிக்கு இரண்டு வார முன் அறிவித்தல் எழுத்து மூலம்

வழங்கிய பின்னர் கம்பனியின் கணக்குப் புத்தகங்களை சோதனை செய்வதற்கு தகவுடையவர்களாவர்.

12.1.6 ஒவ்வொரு காலாண்டு முடிவிலிருந்து 60 நாட்களுக்குள், தங்கப் பங்காளர் மற்றும் கம்பனிக்கிடையில் உடன்பட்ட முன்னர் குறிப்பிட்ட வடிவமைப்பு ஒன்றில் சொல்லப்பட்ட காலாண்டின் போது கம்பனியின் செயலாற்றுகை தொடர்பில் ஒரு காலாண்டு அறிக்கையை தங்கப் பங்காளருக்கு கம்பனி சமர்ப்பிக்க வேண்டும்.

12.1.7 தங்கப் பங்காளர் மற்றும் கம்பனிக்கிடையில் உடன்பட்ட முன்னர் குறிப்பிட்ட வடிவமைப்பு ஒன்றில் கம்பனி தொடர்பான தகவல்களை ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்து 90 நாட்களுக்குள்தங்கப் பங்காளருக்கு கம்பனி சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு 14 – வருமான வரி**

**14.1 தற்போதைய வரி**

நிறுவனத்தின் 2007 இலக்கம் 24 எனும் தேசிய வருமானச் சட்டத்தின் கீழ் உள்ளக வருமானத்திற்கு ஏற்ப வியாபார வரியின் இலாபமும் வருமானமும்.

| | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| ஆறிக்கையிடப்பட்ட வரி வீதம் | 14% | 28% |
| தற்போதைய ஆண்டின இலாப அடிப்படையில் வரி (14.2) | 5,552,486.00 | 4,356,349.37 |
| தற்காலிக வேறுபாடு ஆரம்பத்தில் மற்றும் மீளப் பெறுதல் (15) | 4,356,349.37 | 482,038.46 |
| | 4,356,349.37 | 2,030,569.00 |

**14.2 கணக்கு இலாபம் மற்றும் வருமான வரிக்கும் இடையில் மறு சீராக்கல்**

| | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| கணக்கீட்டு இலாபம் / (நட்டம்) வட்டியும் வரிக்கு முன் | (8,412,741.00) | (1,267,123.00) |
| அனுமதிக்கப்படாதவை | 3,775,743.00 | 4,438,432.00 |
| அனுமதிக்கப்பட்டவை | (1,784,106.00) | (1,325,519.00) |
| மேலதிக நிர்ணயிக்கக்கூடிய கட்டண மீதி | 13,200.00 | - |
| வியாபாரத்தின் சரிபார்க்கப்பட்ட இலாபம் / (நட்டம்) | (6,407,905.00) | (1,154,210.00) |
| ஏனைய மூலாதாராரங்களினால் பெறும் வருமானம் (வட்டி வருமானம்) | 14,275,435.00 | 16,017,845.00 |
| சட்டரீதியான முழு வருமானம் / நட்டம் | 14,275,435.00 | 16,017,845.00 |
| வியாபார நட்ட உரிமை வேண்டுகோள் | (14,275,435.00) | (16,017,845.00) |
| வரி அறவிடக்கூடிய இலாபம் / (நட்டம்) | - | - |
| சாதாரண வியாபாரத்திற்கான வரி | - | - |
| ஏனைய வருமானத்தின் அடிப்படையில் வரி | - | - |
| வருடத்திற்கான இலாபத்தின் அடிப்படையில் வரி | - | - |

**குறிப்பு 15 – ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்**

| | 2018/2019 | 2018/2019 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| வருட ஆரம்பதிதில் நிலுவை | (6,607,452.28) | (10,963,801.65) |
| ஒத்திவைக்கப்பட்ட வரியும் முன் சரிபார்த்தலும் | (242,265.26) | - |
| | 6,365,187.02 | 10,963,801.65 |
| தற்காலிக வேறுபாடு ஆரம்பத்தில் மற்றும் மீளப் பெறுதல் | (5,522,486.81) | (4,356,349.37) |
| வருட இறுதியில் நிலுவை | 842,700.21 | 6,607,452.28 |

வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக வரி சொத்துக்களை பெறுவதற்கு சட்ட ரீதியாக நிறுவகிக்கக்கூடிய உரிமை உள்ள போது அந்த நிதிச் சபைக்கு உரிய ஒத்தி வைக்கப்பட்ட வரி செலுத்துகையில் ஒத்தி வைக்கப்பட்ட வரி மற்றும் பொறுப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

| | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 2,856,708.26 | 7,829,221.15 |
| ஒத்தி வைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | (2,014,008.05) | (1,221,452.87) |
| | 842,700.21 | 6,607,452.28 |

| | 2019/2020 | | 2018/2019 | |
|---|---|---|---|---|
| **ஏற்றுக்கொண்ட ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | **சொத்து** | **பொறுப்பு** | **சொத்து** | **பொறுப்பு** |
| பொறுப்புக்களுக்கான விதிகள் | - | 1,221,768.87 | - | 1,221,768.87 |
| சொத்துக்களுக்கான விதிகள் | 32,548.34 | - | 428,400.00 | - |
| வரையறுக்கப்பட்ட நன்மை பொறுப்புக்கள் | 451,548.58 | - | 881,261.92 | - |
| பாவனைக்குட்படுத்தாத வரிக் கடன் | 2,190,963.24 | - | 6,584,835.02 | - |
| வருமான வரி திருப்பிச் செலுத்தல் | 181,562.11 | - | 363,124.21 | - |
| | 2,856,708.26 | 2,014,008.05 | 7,829,221.15 | 1,221,124.87 |
| முழு ஒத்திவைக்கப்பட்ட வரி | 842,700.21 | | 6,607,452.28 | - |

**குறிப்பு 16**

| திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 31.03.2020 | 31.03.2019 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| செலுத்தப்பட வேண்டிய புலமைப் பரிசில் நிதி | 4,575,061.99 | 4,156,377.99 |
| | 4,575,061.99 | 4,156,377.99 |

**குறிப்பு 17 – திரண்ட செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 578,299.50 | 526,809.50 |
| செலுத்த வேண்டிய பாதுகாப்பு கட்டணம் | 99,779.13 | 135,729.24 |
| செலுத்த வேண்டிய மின்சார கட்டணம் | 317,646.69 | 87,007.77 |
| செலுத்த வேண்டிய நீர்க் கட்டணம் | 17,863.26 | 8,487.19 |
| செலுத்த வேண்டிய செயலாளர் கட்டணம் | 24,633.12 | 46,421.09 |
| செலுத்த வேண்டிய பட்டியல் - சுத்திகரித்தல் சேவை | 52,847.54 | 49,804.90 |
| செலுத்த வேண்டிய கட்டணம் OT , ஜீவனம், Train Season | 408,261.00 | 622,248.33 |
| செலுத்த கட்டணம் -சிற்றுண்டி | 407,187.00 | 1,152,687.00 |
| செலுத்த பட்டியல் கட்டணம் வளவாளர் கட்டணம் | 413,550.00 | 1,029,650.00 |
| செலுத்த பட்டியல் கட்டணம் - தொலைபேசி | 252,802.30 | 262,452.87 |
| செலுத்த வேண்டிய பட்டியல் - செய்திப் பத்திரிகை | 17,015.00 | 26,990.00 |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய பட்டியல் - கணக்கீடு மேற்கொள்ளல் | **142,500.00** | 47,500.00 |
| செலுத்த வேண்டிய பட்டியல் - தொழில்சார் கட்டணங்கள் | **-** | 32,500.00 |
| ஆறு மாதங்களுக்கு மேல் முன்வைக்கப்படாத காசோலைகள்(801) | **587,678.82** | 531,878.82 |
| வர்த்தக கடன் கொடுத்தோர் | **114,000.00** | 74,000.00 |
| செலுத்த வேண்டிய –ஊ.சே.நி | **1,012.57** | 1,012.57 |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | **130,235.00** | 123,732.00 |
| செலுத்த வேண்டிய கட்டணம் –இணையத் தளம் | **70,300.00** | 70,300.00 |
| திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு | **3,000.00** | - |
| அடையாளம் காணப்படாத வைப்பு | **96,406.64** | 96,406.64 |
| | 3,735,020.57 | **4,925,710.92** |

**குறிப்பு 18 – பங்கொன்றுக்கான சம்பாத்தியம்**

பங்கொன்றுக்கான சம்பாத்தியங்களின் கணிப்பீடானது, குறிப்பிட்ட வருடத்தில் நிலுவையான நிறையிடப்பட்ட சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கையால் வகுக்கின்ற வருடத்துக்கான சாதாரண பங்குதாரர்களுக்கு உரித்தாகக் கூடிய இலாபத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

| **18.01 பங்கொன்றுக்கான அடிப்படை சம்பாத்தியங்கள்** | 2019/2020<br>ரூ. சதம் | 2018/2019<br>ரூ. சதம் |
|---|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்கு உரித்தாகக் கூடிய இலாபம் | **6,360,872.93** | 10,196,601.59 |
| நிறையிடப்பட்ட சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கை | **10,200,152.00** | 10,200,152.00 |
| பங்கொன்றுக்கான சம்பாத்தியங்கள் / நட்டம் | **0.62** | 1.00 |

**குறிப்பு 19 - மூலதனக் அர்ப்பணிப்புக்கள்**

ஆறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ளவாறு முக்கிய மூலதன அர்ப்பணிப்புக்கள் கம்பனிக்கு இருக்கவில்லை.

**குறிப்பு 20 – அறிக்கையிடப்படுகின்ற திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு தேவைப்படுகின்ற முக்கிய நிகழ்வுகள் எவையும் அறிக்கையிடப்படுகின்ற திகதிக்குப் பின்னர் நிகழவில்லை.

**குறிப்பு 21 – நிதி இடர் முகாமை**

**மேலோட்டம்**

கம்பனி அதன் நிதி சாதனங்களை பயன்படுத்துவதிலிருந்து பின்வரும் இடர்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றது

- **கடன் இடர்**
- **திரவத் தன்மை இடர்**

ஒவ்வொரு மேற்சொல்லப்பட்ட இடர், கம்னியின் குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் இடரை அளவிடுவதற்கும் மற்றும் முகாமை செய்வதற்குமான நடவடிக்கைமுறைகள் என்பவை தொடர்பில் கம்பனியின் வெளிப்படுத்தல் தொடர்பான தரமானதும் மற்றும் தொகைரீதியானதுமான தகவல்களை இத்தகைய குறிப்புக்கள் வழங்குகின்றன.

**இடர் முகாமை கட்டமைப்பு**

கம்பனியின் இடர் முகாமைக் கட்டமைப்பை தாபித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கான முழுமையான பொறுப்பு பணிப்பாளர் சபையினதாகும். கம்பனியின் இடர் முகாமைக் கொள்கைகள், கம்பனியால் எதிர்நோக்குகின்ற இடரை அடையாளம் காண்பதற்கும் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கும் பொருத்தமான இடர் வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை தாபிப்பதற்கும் மற்றும் இடர் மற்றும் கடைபிடிப்புக்கள் வரையறைகளை கண்காணிப்பதற்கும் கம்பனியின் இடர் முகாமைக் கொள்கைகள் தாபிக்கப்பட்டிருக்கின்றன.

**கடன் இடர்**

கடன் இடர் என்பது கம்பனிக்கான நிதியியல் இழப்பாகும். வாடிக்கையாளர் ஒருவர் அல்லது மூன்றாம் தரப்பினர் ஒருவர் நிதியியல் சாதனம் ஒன்றுக்கான ஒப்பந்த ரீதியான கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தவறுதல், மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து மற்றும் முதலீட்டு பிணைப் பொறுப்புக்களில் இருந்து கம்பனிக்கு பெறப்பட வேண்டியவைகளிலிருந்து முக்கியமாக எழுகின்றது. நிதிச் சொத்துக்களின் முன் கொண்டுவருதல் தொகை ஆகக் கூடுதலான கடன் வெளிப்படுத்தலை பிரதிநிதித்துவம் செய்கின்றது.
அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ளவாறான கடன் இடருக்கான ஆகக் கூடுதலான வெளிப்பாடு பின்வருமாறு இருந்தது:

| | 31.03.2020 | 31.03.2019 |
|---|---|---|
| கடன்கள் மற்றும் பெறப்பட வேண்டியவைகள் | ரூ. சதம் | ரூ. சதம் |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறப்படவேண்டியவைகள் | 23,813,872.71 | 25,630,940.62 |
| முதலீடுகள் | 153,897,430.80 | 152,726,500.76 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 20,652,450.66 | 13,215,922.70 |
| | 198,363,784.17 | 191,870,364.08 |

**திறவத்தன்மை இடர்**

திரவத் தன்மை இடர் என்பது காசு அல்லது ஏனைய நிதிச் சொத்தை விநியோகிப்பதன் மூலம் தீர்க்கப்படுகின்ற கம்பனியின் நிதிப் பொறுப்புக்களோடு தொடர்புடைய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் கம்பனி சிரமத்தை எதிர்நோக்கக் கூடிய இடராகும். இந்த இடரை முகாமை செய்வதற்கான கம்பனியின் அணுகுமுறையானது, சாத்தியமான அளவுக்கு அதன் செலுத்தப்பட வேண்டியதாக உள்ள சந்தர்ப்பத்தில் கம்பனியின் கீர்த்திக்கு ஏற்றுக் கொள்ள முடியாத இழப்பு அல்லது சேதம் ஏற்படாமல் சாதாரண அல்லது அழுத்தமான நிலைமைகளின் கீழ் அதன் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு போதிய திறவத்தன்மை எப்போதும் இருக்கின்றது என்பதை உறுதி செய்வதாகும். திரவத் தன்மை இடரை அளவீடு செய்வதற்கும் மற்றும் அதனைத் குறைப்பதற்கும், கம்பனியின் தேறிய நடவடிக்கை காசுப் பாய்ச்சலை நெருக்கமாகக் கண்காணித்து, காசு மற்றும் காசுக்கு சமமானவைகளை ஒரு மட்டத்தில் பேணியது என்பதோடு நிதி நிறுவனங்களிலிருந்து நிதியீட்ட வசதிகளை ஏற்பாடு செய்தது.

| | 31.03.2020 | 31.03.2019 |
|---|---|---|
| **பெறுமதிகள் அல்லாத நிதிப் பொறுப்புக்கள்** | ரூ. சதம் | ரூ. சதம் |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் | 3,735,020.57 | 4,925,710.92 |
| | 3,735,020.57 | 4,925,710.92 |

**குறிப்பு 22 – ஆதனம் பொறித் தொகுதிகள் உபகரணங்கள் விற்பனை**

2018 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறான விற்றுத் தீர்க்கக் கூடிய ஆதனம் பொறித் தொகுதிகள் உபகரணங்கள் என்பவற்றை அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு திறன்கள் விருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சிலிருந்து உறுதிப்படுத்தல் அலுவலரைக் கம்பனி வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட காலத்தின் போது ஆதனம் பொறித் தொகுதிகள் உபகரணங்கள்என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக எந்த அலுவலரும் நியமிக்கப்பட வில்லை.

**குறிப்பு – 23**

**தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்**

நிதிக் கூற்றுக்களினால் விபரிக்கப்பட்ட காலப்பகுதியின் போது தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் கம்பனிக்கு இருந்தன. பிரதான முகாமை ஆள் நட்டஈடுகள் பின்வருமாறு:

| | 2019/2020 |
|---|---|
| | ரூ. சதம் |
| சபை அங்கத்தவர் வருகைக் கொடுப்பனவு | 87,500.00 |
| சபை அங்கத்தவர் பிரயாணக் கொடுப்பனவு | 62,500.00 |
| | 150,000.00 |

வீரீவை/பீ /எஸ்டிஎவ்எல்/எவ்ஏ/2019/2020 2020 திசெம்பர் 31

தலைவர்

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்

**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் ("கம்பனி") 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 16) 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து எதிர்பார்ப்புக்கள் வேறுபட்டால் எல்கேஏஎஸ் 08 இன் பிரகாரம் மாற்றங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள ரூபா 13,629,427 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பிற்போடப்பட்ட வரி ரூபா 1,255,789 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமான வரி மீளளிப்பாக காட்டப்பட்ட ரூபா 1,296,872 தொகையை கம்பனி இனங்கண்டிருந்த போதிலும் மீதியின் அறவீட்டுத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு போதுமான கணக்காய்வு சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல்.

மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2)(ஈ) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை;

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது

நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- பின்வருவன தவிர 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் கம்பனி இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

| | **சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு** | **விபரம்** |
|---|---|---|
| | ------------------------------------------- | --------- |
| (அ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவு | காலாண்டு ஒன்றிற்கு ரூபா 12.5 மில்லியன் புரள்வை விஞ்சிய கம்பனிகள் பொருளாதார சேவைக் கட்டணங்களிற்காக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் புரள்வு மேற்படி எல்லையை விஞ்சியிருந்த போதிலும் பொருளாதார சேவைக் கட்டணங்களிற்காக கம்பனி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டியலின் 85(1)(அ) பிரிவு மற்றும் 10(1)(இ)(i) ஆம் விடயம் | 2018 ஏப்ரல் 01 தொடக்கம் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட சேவைகள் மீதான பிடித்துவைத்தல் வரியை கம்பனி கழித்து அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | 2011 நவம்பர் 18 ஆம் திகதிய டிஎம்எஸ்/ஈ4/47/9/282/1/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் கடிதம் | கடிதத்திலுள்ள ஏற்’பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது கம்பனியின் 33 உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்பு படிகளாக ரூபா 2,266,500 தொகை கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2015 மே 15 ஆம் திகதிய பிஈடி 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 09 உத்தியோகத்தர்களிற்கு தொலைபேசி படிகளாக ரூபா 251,347 தொகை கம்பனியால் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

**டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**